**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 11.02.2026**
**OS. No. 164/2023**
**வழக்கு சாட்சி DW.2– பொன்னா , க/பெ. உதயா**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி சொத்து தனக்கு வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தானது அலமேலு பெயரில் மட்டும் தான் உள்ளதா என்றால் ஆமாம். வாதி தனம் பெயரில் சொத்து இல்லையா என்றால் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தை 10, 15 வருடங்களுக்கு முன்பாக காமராஜர் என்பவரின் மூலமாக அறிவழகன் என்பவரிடம் வாங்கினார். தாவா சொத்து மொத்தம் 5 சென்ட் ஆகும். தாவா சொத்தில் வாதி வடக்கு பக்கமாகவும், பிரதிவாதி தெற்கு பக்கமாகவும் உள்ளார்கள். பிரதிவாதியுடன் தாவா சொத்தில் யார் குடியுள்ளாார்கள் என்றால் அவரது பிள்ளைகளுடன் உள்ளார். தாவா சொத்தை வாதியும், அவரது மகளான பிரதிவாதியும் சேர்ந்து தான் கிரையம் பெற்றார்கள் என்றும், அது தெரியாமலேயே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) வாதிக்கு தாவா சொத்து தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி தனது பிள்ளைகளை வைத்து வாதியை மிரட்டி தொந்தரவு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. நான் எங்கு குடியுள்ளேன் என்றால் கவுண்டனூரில் குடியுள்ளேன். நான் கவுண்டனூரில் குடியுள்ளதாக தான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, தாவா சொத்திலிருந்து 1 மைல் தொலைவில் உள்ளதாக சொல்லியுள்ளேன். நான் எரகுண்டபட்டியில் குடியுள்ளதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை.

3) என் நிரூபண வாக்குமூலத்தில் வாதிக்கு 10 சென்ட் நிலம் உள்ளதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான், நான் அவ்வாறு சொல்லவில்லை.

வாதி அவருடைய தம்பி ஜெயபால் மகன் ராஜேந்திரன் என்பவர் வாதிக்கு பாத்தியப்பட்ட 10 சென்ட் நிலத்தை அபகரிக்கவேண்டி ஏமாற்றி தூண்டிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கை பற்றியும், வழக்கு சொத்து பற்றியும் எவ்வித சங்கதியும் தெரியவில்லை என்றும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.